**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 23.07.2025**
**OS. No. 49/2022**
**வழக்கு சாட்சி PW.1–வேலு, த/பெ. முத்துகவுண்டர்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 8ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**8ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

22) பத்திர எண்.474/2022ல் மாதேஷ் சித்தையன் ஆகியோர்கள் கிரையம் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் என் அண்ணன் மாதேஷ் கொடுத்தது மட்டும் தெரியும், சித்தையன் கொடுத்தது தெரியாது. என் அண்ணன் மாதேஷ் பெயரில் தனிப்பட்ட சொத்துக்கள் ஏதேனும் இருந்ததா என்றால் இல்லை. என் அண்ணன் மாதேசிடம் கிரையம் பெற்றவர்கள் காட்டை ஓட்டும் போது அவர் கிரையம் கொடுத்தவிவரம் தெரிந்து கொண்டேன். அதன் பிறகு நான் மேற்கண்ட பத்திரத்தை வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. நான் காட்டை ஓட்டிய நபர்களிடம் கேட்டபோது என் அண்ணன் நிலத்தை விற்றதாக என்னிடம் தெரிவித்தார்கள், அதன் அடிப்படையில் என் அண்ணன் கிரையம் கொடுத்த விவரம் தெரிந்து கொண்டேன்.

23) மேற்கண்ட பத்திரத்தில் என் அண்ணன் மாதேசுக்கு சொத்து பாத்தியம் உள்ளது, அதனால் அவர் விற்பதாக ஏதேனும் வாசகம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு எதுவும் இல்லை. மேற்கண்ட பத்திரத்தில் தெளிவாக பழனியப்ப கவுண்டர் மகன் சித்தையன் தனக்காகவும், மேஜர் மக்கள் தங்கராஜ், தன் மைனர் மகன்கள் கோவிந்தன் மற்றும் சக்திவேல் என்றும், மேற்படி ஊரில் வசிக்கும் முத்துகவுண்டர் மகன் மாதேஷ் என்றும், 2வது பக்கத்தில் அந்த சொத்து விவரத்தில் கண்ட சொத்து பிதுர்ராஜ்ஜியமாக பாத்தியப்பட்டதும், வாய்மொழி பாகப்படியும் பாத்தியப்பட்ட சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் வாசகம் அவ்வாறு உள்ளது. மேற்கண்ட பத்திரத்தில் 5வது நபராக காண்பிக்கப்பட்டுள்ள முத்துக்கவுண்டர் மகன் மாதேஷ் என்பவருக்கு பாத்தியப்பட்டு, கிரையம் கொடுத்ததாக எங்கும் குறிப்பிடப்படவில்லை என்றால் அவ்வாறு எதுவும் இல்லை.

24) 18.02.2008 ம் தேதியில் பத்திர எண்.715/2008 ன் கீழ் 8 ம் பிரதிவாதிக்கு தாவா சொத்துக்களை விற்பனை செய்த சித்தையன் என்பவர் ராமாயி என்பவருக்கு 37 சென்ட் நிலத்தை கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். பத்திர எண்.716/2008 ல் அதே தேதியில் சித்தையன் மற்றும் அவரது வாரிசு தாரர்களுக்கு ச.எண்.307/16C ல் 7–1/2 சென்ட் நிலத்திற்கு செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் அவ்வாறுஎன்னிடம் காண்பிக்கப்படும் வில்லங்க சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளது, எனக்கு தெரியவில்லை. 20.03.2009 ல் நான் பத்திர எண்.1701/2009 என்ற ஆவணப்படி 6 சென்ட் நிலத்தை என் அண்ணன் மாதேஷ் அவர்களுக்கு கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் அவ்வாறு எதுவும் கொடுக்கவில்லை. நான் ச.எண்.307/16C ல் 6 சென்ட் நிலம் நான் மேற்கண்ட ஆவணம் வாயிலாக என் அண்ணன் மாதேசிற்கு கிரையம் கொடுத்துள்ளேன் என்றும், அதற்கான ஆவணம் 8 ம் பிரதிவாதியின் வசம் உள்ளது என்றும், நான் அதை மறைத்து சாட்சயிம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 10.07.2009 ம் தேதியில் என் அண்ணன் மாதேஷ் என்பவர் தங்கம்மாள் என்பவருக்கு 8.10 சென்ட் நிலத்தை கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான், தொகுப்பு வீடு கட்டுவதற்காக எங்கள் நிலத்தை என் அண்ணன் என் அண்ணி பெயருக்கு கொடுத்துள்ளார்.

25) பத்திர எண்.5067/2011 என்ற பத்திரத்தின் வாயிலாக 8–1/2 சென்ட் நிலத்தை என் அண்ணன் மாதேஷ அவர்கள் கந்தசாமி, வீரப்பன் மற்றும் ராஜா ஆகியோருக்கு உடன்படிக்கை ஏற்படுத்திக்கொடுத்துள்ளார் என்றால் என்னிடம் காட்டப்படும் வில்லங்க சான்றிதழில் உள்ளது, எனக்கு சரியாக தெரியவில்லை. என் அண்ணன் சொத்தை யார் யாருக்கெல்லாம் விற்பனை செய்தார்களோ அவர்கள் அனைவரையும் இவ்வழக்கில் நான் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் இந்த சொத்து விற்றது சம்மந்தமாக மட்டும் தான் எனக்கு தெரியும், மற்ற நபர்களுக்கு விற்ற விவரம் எனக்கு தெரியாது. எல்லா விவரங்களும் தெரிந்து கொண்டு 8 ம் பிரதிவாதியை பழிவாங்கவேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 8 ம் பிரதிவாதி நானும், என் அண்ணனும் தொடர்ந்து செய்த

தொந்தரவினால் அவர் கிரையம் பெற்ற சொத்தை அனுபவிக்க இயலாம் இடைஞ்சல் செய்யக்கூடாது என்று அ.வ.எண்.17/2022 தாக்கல் செய்த பிறகு அந்த வழக்கின் அழைப்பாணையை பெற்ற பிறகு, சொத்து பாகம் பிரியாத சொத்து என்றும், அதில் பாகம் பிரித்து கொடுக்கும் படி சொல்லி பரிகாரம் கேட்டு மோசடியாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

26) என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளவாறு 20.03.2022ல் ஊரிலுள்ள பெரியவர்கள் யார் யாரை வைத்து பஞ்சாயத்து பேசப்பட்டது என்றால் எனக்கு தெரியவில்லை. 8ம் பிரதிவாதி தாவா சொத்துக்களை மூன்றாம் நபர்களுக்கு விற்கபோவதாக நான் சொல்வது யாருக்கு என்றால் என் அண்ணன் விற்பனை செய்த நிலத்திற்கு மட்டும் தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். பிராது பத்தி 7ல் 1 மற்றும் 7 பிரதிவாதிகள் மோசடியாக கிரையம் 8ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திக்கொடுத்ததாகவும், அதன் பேரில் 8ம் பிரதிவாதி தாவா சொத்தை மோசடியாக விற்கபோவதாகவும் சொல்லிவிட்டு, தற்போது என் அண்ணன் விற்பனை செய்த நிலத்திற்கு மட்டும் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து விற்பனை செய்யப்பட்ட அனைத்து நபர்களையும் வழக்கில் சேர்க்காமல் 8ம் பிரதிவாதிக்கு மட்டும் கிரையம் கொடுத்தது செல்லத்தக்கதல்ல என்று பரிகாரம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும், மொத்த சொத்தின் அளவுகள் குறித்து சரியாக குறிப்பிடவில்லை என்றும், 8ம் பிரதிவாதிக்கு தாவா சொத்துக்கள் வாங்கிய தேதியிலிருந்து, வருவாய் துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்து, அனுபவித்து வருவதற்கான ஆவணங்களை தாக்கல் செய்த பின்னிட்டும், வழக்கு சொத்திற்கு சம்மந்தமே இல்லாத என் சகோதரர் மாதேஷ் 8ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டதாகவும், அதை ரத்து செய்ய நான் கோருவதற்கு எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.

27) 8ம் பிரதிவாதி தாக்கல் செய்த வழக்கில் அவருக்கு ஆதரவாக பரிகாரம் கிடைத்துவிடும் என்பதற்காக, அதை தடுப்பதற்காக வேண்டி தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கானது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.